©
தமிழ்நாடு அரசு
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 36] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 5, 2018
ஆவணி 20, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (2D) எண் 50, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 15 மே 2018.]*

**1948–**ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3–**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, மற்றும் **5–**ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **04–09–2013** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் **II** பிரிவு **2** இல், **605** மற்றும் **606** ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/684/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் சலவையகங்கள் மற்றும் துணிகள் துவைத்தல் (கம்பளி உட்பட) தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்கக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **5–**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**(2)** இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

## விவர அட்டவணை

## சலவையகங்கள் மற்றும் துணிகள் துவைத்தல் தொழிலில் (கம்பளி உட்பட) வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* (1) | *தொழிலின் வகை* (2) | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (8 மணி நேரப் பணிக்கு நாளொன்றுக்கு)* (3) *(ரூ. காசு.)* |
|---|---|---|
| 1. | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) அல்லது தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்டத்தின் அல்லது தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் கீழ் சலவையகங்களில் துணிகள் துவைத்தல். | 337.00 |
| 2. | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) அல்லது தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்டத்தின் அல்லது தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் கீழ் சலவையகங்களில் துணிகளுக்குப் பெட்டி போடுதல். | 343.00 |
| 3. | மேற்சொன்ன இனம் (1) இல் குறிப்பிடப்பட்டவை நீங்கலாக சலவையகங்ளில் துணிகளைத் துவைத்தல். | 342.00 |
| 4. | மேற்சொன்ன இனம் (2) இல் குறிப்பிடப்பட்டவை நீங்கலாக சலவையகங்ளில் துணிகளுக்குப் பெட்டி போடுதல். | 349.00 |

**விளக்கங்கள்:—(1)** குறைந்த அளவு ஊதிய வீதங்கள் ரொக்கமாக வழங்கப்படும்.

(2) **அகவிலைப்படி**:— மேலே குறிப்பிடப்பட்ட குறைந்த அளவு அடிப்படை ஊதியங்களுடன் தொழிலாளர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) மேலே அறிவிக்கையிடப்பட்டிருக்கும் ஊதியங்கள் 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளன (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், நாளொன்றுக்கு ரூ. 2.05 (ரூபாய் இரண்டு மற்றும் ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய பன்னிரெண்டு மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டின் (அதாவது ஜனவரி முதல் டிசம்பர் வரை) சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையில், இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இத்திருத்தம் செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) தினப்படி ஊதிய வீதங்கள் மற்றும் அகவிலைப்படியில் விடுமுறை ஊதியங்களும் அடங்கும்.

(5) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(6) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 60, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 26 ஜூன் 2018.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு, ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **06–02–2013** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு–**2** இல், **115** மற்றும் **117** ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/157/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னரும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் **(1)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் தோல் பதனீட்டு தொழிற்சாலைகள் மற்றும் தோல் பொருள் தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். மேற்சொன்ன அறிவிக்கையின் இதன் வரைவு, இதற்கு முன்னர் மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவின் **(1)** உட்பிரிவின் **(b)** ஆம் பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**(2)** இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

### விவர அட்டவணை

### தோல் பதனீட்டு தொழிற்சாலைகள் மற்றும் தோல் பொருள் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு ஊதிய வீதங்கள் நாளொன்றுக்கு (ரூ. காசு.)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| **விலங்கின் ரோமத்தை நீக்குகிற பகுதி :** | |
| 1. உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. தோலை பளபளபாக்குபவர் | 161.50 |
| 3. ஸ்கட்டர்கள் | 161.50 |
| 4. ஆட்டின் தோலை உரிப்பவர் | 161.50 |
| **தோல் பதனிடுதல் மற்றும் சாயம் தோய்க்கும் பிரிவு:** | |
| 1. உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. கொள்கலன் எடுத்துச் செல்பவர்கள் | 160.00 |
| 3. ரோமம் நீக்குபவர்கள் | 164.00 |
| 4. மயிரிழையைப் பகுப்பவர்கள் | 164.00 |
| 5. ரோமம் நீக்க கற்றுக் கொள்பவர் | 160.00 |
| 6. பாமிங் உதவியாளர்கள் | 160.00 |
| **சீரமைக்கும் பிரிவு:** | |
| 1. உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. இயந்திரத்தை இயக்குபவர் | 160.00 |
| 3. கையினால் சீரமைப்பவர் | 160.00 |
| **அடுக்கி வைக்கும் பிரிவு :** | |
| 1. உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. பஸ்டர்கள் | 160.00 |
| 3. அடுக்கி வைப்பவர்கள் | 160.00 |
| **இறுத்தெடுக்கும் பிரிவு :** | |
| 1. உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. இறுத்தெடுப்பவர்கள் | 160.00 |
| **பணி நிறைவுப் பிரிவு :** | |
| 1. உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. பதப்படுத்துபவர்கள் | 160.00 |
| 3. தெளிப்பவர்கள் | 160.00 |
| **பணி நிறைவு பணியாளர் பிரிவு :** | |
| 1. உதவி செய்பவர்கள் | 160.00 |
| 2. முரட்டுத்தோல் இயந்திரத்தை இயக்குபவர் | 160.00 |
| 3. சாணைக்கல் சக்கரத்தை இயக்குபவர் | 160.00 |
| 4. பளபளப்பு ஏற்படுத்தும் இயந்திரத்தை இயக்குபவர் (Cow) | 160.00 |
| 5. சீராக்குபவர்கள் | 160.00 |
| 6. அழுத்துகிற இயந்திரத்தை இயக்குபவர்கள் | 160.00 |
| 7. கைகளினால் சலவை செய்பவர்கள் | 160.00 |
| 8. தாடை ரோமம் நீக்குபவர்கள் | 160.00 |
| 9. பளபளப்பு ஏற்படுத்தும் இயந்திரத்தை இயக்குபவர்கள் (Glaze Kid) | 163.00 |

| பணியாளர்களின் வகைகள் | குறைந்தளவு ஊதிய வீதங்கள் நாளொன்றுக்கு (ரூ. காசு.) | பணியாளர்களின் வகைகள் | குறைந்தளவு ஊதிய வீதங்கள் நாளொன்றுக்கு (ரூ. காசு.) |
|---|---|---|---|
| (1) | (2) | (1) | (2) |
| **பௌண்டரி பிரிவு :** | | **புழக்கடை பிரிவு :** | |
| 1. உதவி செய்பவர்கள் | 160.00 | 1. டீமர்கள் | 160.00 |
| 2. பொருத்துநர்கள் | 163.00 | 2. சீரமைப்பவர்கள் | 160.00 |
| 3. ஓட்டுநர்கள் | 165.50 | **பொது :** | |
| 4. கல் தச்சர் | 163.50 | 1. மேஸ்திரிகள் | 4910.00/திங்களொன்றுக்கு |
| 5. தச்சர்கள் | 163.50 | 2. எழுத்தாளர்கள் /காசாளர்கள் | 4910.00/திங்களொன்றுக்கு |
| 6. பொருத்துநர்கள், ஓட்டுநர்கள் (கற்றுக்கொள்பவர்கள்) | 160.00 | 3. காவலாள் | 4858.00/திங்களொன்றுக்கு |

**ஏனைய தோல் பதனீட்டு தொழிற்சாலைகள் :**

(i) விலங்கின் ரோமத்தை நீக்குகிற குழியில் அல்லது தோலை நீக்குகிற குழியில் தோல் மற்றும் உரிவைகளைப் பதனிடுவதற்கு, முதல் யூனிட்டுக்கு ரூபாய் **54.09** காசுகள் மற்றும் வேலை செய்யப்படுகிற ஒவ்வொரு கூடுதல் யூனிட்டிற்கும் ரூபாய் **5.64** காசுகள் வீதம் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

(ii) பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு, நாளொன்றுக்கு ரூபாய் **160.00** வழங்கப்பட வேண்டும்.

**செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறுகிற தொழிலாளர்கள் :**

விலங்கின் ரோமத்தை நீக்குகிற அல்லது தோலை நீக்குகிற குழியில் முதல் யூனிட்டைப் பொறுத்த வரையில், செய்யப்பட்ட வேலைக்காக, ரூபாய் **84.51** காசுகளும், வேலை செய்யப்படுகிற ஒவ்வொரு கூடுதல் யூனிட்டிற்கும் ரூபாய் **37.19** காசுகள் வீதமும் ஊதியம் வழங்கப்பட வேண்டும். விலங்கின் ரோமத்தை நீக்குகிற அல்லது தோலை நீக்குகிற குழியில் வேலை செய்யப்பட்ட ஒவ்வொரு கூடுதல் யூனிட் ரூ.**5.64** வழங்கப்பட வேண்டும்.

**தோல் பதனீடு மற்றும் தோல் பொருள் தயாரிப்பு தொழிலில் உள்ள பொதுவான வகைகள் :**

| | |
|---|---|
| (1) எழுத்தர் / காசாளர் | மாதமொன்றுக்கு ரூபாய் **4910.00** |
| (2) மேஸ்திரிகள் அல்லது மேற்பார்வையாளர்கள் | மாதமொன்றுக்கு ரூபாய் **4910.00** |
| (3) காவலாள் | மாதமொன்றுக்கு ரூபாய் **4858.00** |

**விளக்கங்கள்:—**

(i) மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டவாறு அகவிலைப்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படியை கணக்கிடுவதற்கு 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது **2001** ஆம் ஆண்டில் **100** புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட **176** புள்ளிகளாகும்). **176** புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும், அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ. **90** காசுகள் (தொண்ணூறு காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(iii) ஏதேனும் தோல் பதனீட்டு தொழிற்சாலை மற்றும் தோல் பொருள் தயாரிப்பு தொழிலில் செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறுகிற தொழிலாளர்களை பணியில் அமர்த்துகிறவிடத்து, வழக்கமான வேலை நாள் ஒன்றுக்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்குகிற ஊதியம், அந்த வகையினருக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைவிட குறைவாக இருக்கக்கூடாது.

(iv) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை **26** ஆல் வகுக்க வேண்டும்.

(v) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை **30** ஆல் பெருக்க வேண்டும்.

(vi) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண். 66, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 2 ஜூலை 2018.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு, ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 10–04–2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு–2–இல், 250 மற்றும் 251 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/303/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் கடல்படு உணவைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்கக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**கடல்படு உணவைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள்**

| பணியாளர்களின் வகைகள் | மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ.காசு) |
|---|---|
| (1) | (2) |
| **அ. நிருவாகப் பணியாளர்கள்** | |
| 1. மேலாளர். | 6808.00 |
| 2. உதவி மேலாளர். | 5723.00 |
| 3. காசாளர். | |
| 4. கணக்காளர். | 5394.00 |
| 5. உதவியாளர் / எழுத்தர் | 5289.00 |
| 6. தட்டச்சர். | 5177.00 |
| 7. ஓட்டுநர். | |
| 8 குற்றேவலர் / ஏவலாள். | 4960.00 |
| 9. காவலாள் | 5073.00 |
| **ஆ. தொழிற்சாலைப் பணியாளர்கள்** | |
| 1. பொறியாளர். | 7891.00 |
| 2. உற்பத்திப் பொறுப்பாளர். | 6808.00 |
| 3. உற்பத்தி மேற்பார்வையாளர். | 6158.00 |
| 4. மேற்பார்வையாளர்கள் (தளவாடம் / பதப்படுத்தல் / கொள்முதல் / சிப்பம் செய்தல்). | 6158.00 |
| 5. உதவி மேற்பார்வையாளர்கள் | 5723.00 |
| 6. தளவாடத்தை இயக்குபவர். | 6158.00 |
| 7. தொழில்நுட்பாளர். | 6158.00 |
| 8. மின் கம்மியர். | 5723.00 |
| 9. இயந்திரக் கம்மியர் | 5723.00 |
| 10. பதப்படுத்தும் பணியாளர். | 5506.00 |
| 11. தோல் உரிக்கும் பணியாளர் | 5393.00 |
| 12. தரம் பிரிக்கும் தொழிலாளர். | 5393.00 |
| 13. சிப்பம் செய்பவர் | 5177.00 |
| 14. பதப்படுத்தும் உதவியாளர். | 5177.00 |
| 15. சுத்தம் செய்தல் / பொருத்துதல் பணியாளர்கள். | 5177.00 |
| 16. உதவியாளர் (அனைத்து வகையினரும்). | 5177.00 |
| 17. பாரம் ஏற்றி / இறக்கும் பணியாளர்கள் | 4960.00 |
| 18. மேற்சொன்ன வகைபாட்டில் எவற்றின் கீழும் வராத பணியாளர்கள். | 5177.00 |

**விளக்கங்கள்:—(1) அகவிலைப்படி:–** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், திங்கள் ஒன்றுக்கு ரூ. 30.80 (ரூபாய் முப்பது மற்றும் எண்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 20 ஜூலை 2018.]*

1948–ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், வெளியிடக்கருதியுள்ள அறிவிக்கையின் கீழ்காணும் வரைவு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) - பகுதியில் சொல்லியுள்ளவாறு, இதனால் வெளியிடப்படுகிறது.

2 இது தொடர்பாக 29–10–2018 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாக வரப்பெறுகிற யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948–ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 18–12–2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 814 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/946/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் புகையிலை தயாரிப்பு (மூக்குப்பொடி)த் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### புகையிலை தயாரிப்பு (மூக்குப்பொடி)த் தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | **தேர்ச்சி பெற்றவர்கள்:** மூக்குப்பொடி (உடலுழைப்பு மூலம்) தயாரிக்கும் அனைத்து நடைமுறைப் பணிகளையும் மேற்கொள்ளும் தொழிலாளர்கள் | நாளொன்றுக்கு ரூ. 210.00 |
| 2. | **ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** நரம்பு கிழித்தெடுத்தல் (Stripping) மற்றும் வறுத்தலில் அல்லது பொரித்தலில் (உடலுழைப்பு மூலம்) ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் | நாளொன்றுக்கு ரூ. 189.00 |
| 3. | **தேர்ச்சி பெறாதவர்கள்:** நரம்பு கிழித்தெடுத்தல், கையாளுதல், சிப்பம் கட்டுதல் மற்றும் ஏனைய பல்வகைப் பணிகள் (உடலுழைப்பு மூலம்) | நாளொன்றுக்கு ரூ. 183.50 |
| 4. | **செய்யும் வேலைக்குத் தக்க ஊதியப் பணிகள்:** | |
| (i) | ஒரு கிலோ கிராம் புகையிலையை மூக்குப்பொடியாக்குதல் | 19.85 |
| (ii) | ஒரு கிலோ கிராம் புகையிலையை நறுக்குதல் | 2.23 |

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| (iii) | ஒரு கிலோ கிராம் புகையிலையின் நரம்பு கிழித்தெடுப்பதற்கு. | 2.37 |
| (iv) | ஒரு கிலோ கிராம் புகையிலையை வறுத்தல் மற்றும் பொரித்தல் | 6.19 |
| (v) | ஒரு கிலோ கிராம் புகையிலையை அரைத்தல் | 6.19 |
| (vi) | ஒரு கிலோ கிராம் புகையிலையைக் கலவை செய்தல் | 3.21 |

**விளக்கங்கள்:—(1) அகவிலைப்படி** : மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், அகவிலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ. 1.13 காசுகள் (ஒரு ரூபாய் பதிமூன்று காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) நிர்ணயிக்கப்பட்ட கூலி மற்றும் அகவிலைப்படியில் விடுமுறை நாட்களுக்கான ஊதியமும் அடங்கும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 7 மே 2018.]*

1972–ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1972) 7–A பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 22–03–2000–ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2–இல், 161 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/317/2000 ஆம் எண் அறிவிக்கையினை ரத்துசெய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக பின்வரும் அட்டவணையின் நெடும்பத்தி (1)–இல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை, அதன் (2) நெடும் பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் ஆய்வாளர்களாக இதனால் நியமனம் செய்கிறார்.

## அட்டவணை

| *நபர்கள்*<br>*(1)* | *நிறுவனங்கள்*<br>*(2)* |
|---|---|
| 1. தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர்கள் (மலைத்தோட்டத் தொழில்) | 1951–ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 69/1951) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட வரம்புப் பகுதிகள். |
| 2. தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் (மகளிர் நலன்), திருநெல்வேலி.<br>3. தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் (மகளிர் நலன்), கோயம்புத்தூர்.<br>4. தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் (மகளிர் நலன்), சென்னை. | 1979–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 30/1979) 20–ஆம் பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அதிகார வரம்புப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகள் நீங்கலாக ஏனைய அனைத்து நிறுவனங்கள். |
| 5. தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர்கள் (செயலாக்கம்)<br>6. தொழிலாளர் நல துணை ஆய்வாளர் | 2009–ஆம் ஆண்டு சட்டப்படிக்கான அளவைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் அதிகார எல்லைகளுக்குள் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மலைத்தோட்டங்கள் நீங்கலாக அனைத்து நிறுவனங்கள். |

## அறிவிக்கை II

*[அரசாணை (நிலை) எண் 55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 7 மே 2018.]*

1972–ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1972) 3–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 01–04–2015 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II-பிரிவு 2–இல், 283 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/153/2015 ஆம் எண் அறிவிக்கையினை ரத்துசெய்துவிட்டு, அதற்குப் பதிலாக தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் அட்டவணையின் நெடும்பத்தி (2)–இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை, அதன் (3) நெடும் பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் மேற்சொன்ன சட்டத்தின் நிருவாகத்திற்கான கட்டுப்பாட்டு அதிகாரிகளாக இதனால் நியமனம் செய்கிறார்.

| *தொடர் எண்*<br>*(1)* | *அதிகாரிகள்*<br>*(2)* | *பகுதிகள்*<br>*(3)* |
|---|---|---|
| 1. | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம்–I, சென்னை. | 1947–ஆம் ஆண்டு தொழிலகத் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 4–ஆம் பிரிவின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட அதிகார வரம்புப் பகுதிகள். |
| 2. | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம்–II, சென்னை. | |
| 3. | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், வேலூர். | |
| 4. | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், மதுரை. | |
| 5. | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி. | |
| 6. | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், திருநெல்வேலி. | |
| 7. | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், திண்டுக்கல். | |
| 8. | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், சேலம். | சேலம், ஈரோடு, நாமக்கல் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி வருவாய் மாவட்டங்கள். |
| 9. | தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் அலுவலகம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள். |
| 10. | அனைத்து தொழிலாளர் நல துணை ஆணையர்கள். | 1947–ஆம் ஆண்டு தொழிலகத் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 4–ஆம் பிரிவின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட அதிகார வரம்புப் பகுதிகள். |

## அறிவிக்கை III

*[அரசாணை (நிலை) எண் 55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 7 மே 2018.]*

**1972—ஆம்** ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1972) 7—ஆம் பிரிவின், **(7)—உட்பிரிவில்** வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **18—11—2009** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் **II**-பிரிவு **2—இல், 438** ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/608/2009 ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாக தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் அட்டவணையின் நெடும் பத்தி **(2)—இல்** குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை, அதன் **(3)** நெடும் பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான மேல்முறையீட்டு அதிகாரிகளாக இதனால் நியமனம் செய்கிறார்.

| *தொடர் எண்* | *அதிகாரிகள்* | *பகுதிகள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **1.** | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், சென்னை. | சென்னை, வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் வருவாய் மாவட்டங்கள். |
| **2.** | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், திருச்சி. | திருச்சி, திண்டுக்கல், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர், கரூர் மற்றும் தேனி வருவாய் மாவட்டங்கள். |
| **3.** | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், மதுரை | மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள். |
| **4.** | தொழிலாளர் நல கூடுதல் ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் தருமபுரி வருவாய் மாவட்டங்கள். |

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 92, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 2 ஆகஸ்ட் 2018.]*

தமிழ்நாடு **2018—ஆம்** ஆண்டு தொழிலக நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **26/2018) 1—ஆம்** பிரிவைச் சேர்ந்த **(2)** ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், **02—08—2018—ஆம்** நாளை, மேற்சொன்ன சட்டம் செயலுக்கு வரும் நாளாக, இதனால் அறிவிக்கிறார்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

---

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.